# Service and Information Update

## ப்ராம்ப்ட்டனில் கோவிட்-19 பெருந்தொற்று பரவலின்போது உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய தினம்

ப்ராம்ப்ட்டன், ON (செப்டம்பர்23, 2021) – செப்டம்பர் 15 ஆம் தேதியன்று நகரசபையின் ஒப்புதலின் பேரில், ப்ராம்ப்ட்டன் நகரமானது உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய தினத்தை செப்டம்பர் 30 ஆம் நாள் அனுசரிக்கும். அந்த நாளில் ப்ராம்ப்ட்டன் நகர சேவைகள் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் இதோ.

தீயணைப்பு மற்றும் அவசரகாலச் சேவைகள், போக்குவரத்துச் சேவைகள், சட்ட அமலாக்கம், சாலைப்பணிகள், மற்றும் பாதுகாப்பு சேவைகள் ஆகியவை உள்ளிட்ட மிக முக்கியமான சேவைகள், நமது சமூகத்தினருக்கு ஆதரவளிப்பதற்காக, வழக்கம்போல் தொடர்ந்து செயல்படும்.

எந்த ஒரு விசாரிப்புக்கும் குடியிருப்புவாசிகள் 311 ஐ அல்லது (ப்ராம்ப்ட்டனுக்கு வெளியிலாக) 905.874.2000 ஐ, அழைக்கலாம்; Brampton 311 செயலியை (App Store அல்லது Google Playயில் கிடைக்கிறது) உபயோகிக்கலாம், www.311brampton.ca க்கு வருகை தரலாம் அல்லது 311@brampton.ca க்கு மின்னஞ்சல் செய்யலாம். கோவிட்-19 தொற்றுப்பரவல் விசாரிப்புக்கள் உள்ளிட்ட ப்ராம்ப்ட்டன் நகரம் அல்லது பீல் பிராந்தியம் பற்றிய எந்த விசாரிப்புக்களுக்கும் நாங்கள் 24/7 என்னும் முறையில் கிடைக்கபெறுகிறோம். மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/COVID19.

**ப்ராம்ப்ட்டனில் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான தினம் மற்றும் ஆரஞ்சு சட்டை தினத்திற்கான நிகழ்ச்சிகள் திட்டமிடல்**

நகர நிவாகமானது உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான வாரத்தை அனுசரித்து, செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 1 வரை 'ஒவ்வொரு குழந்தையும் முக்கியம்' எனும் கொடியேற்றம் செய்வதன் மூலம் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான தேசிய தினம் மற்றும் ஆரஞ்சு சட்டை தினம் ஆகியவற்றை அங்கீகரிக்கும். செப்டம்பர் 30 ஆம் தேதியன்று, நகரசபையில் உள்ள கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர மணிக் கூட்டு ஆரஞ்சு நிறத்தில் ஒளிரவிடப்படும்.

தொடர்ச்சியான கற்றலை வளர்க்க, பணியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கான ஒரு நம்பகமானதும் அணுக்கூடியதுமான www.brampton.ca/bramptonremembers எனும் ஒரு வலைத்தளத்தை நகர நிர்வாகம் ஏற்படுத்திக் கொடுக்கும்.

செப்டம்பர் 30 ஆம் தேதிக்கான Brampton's Events Calendar க்கு சமுதாய தலைவர்கள் மற்றும் குழுக்கள் தங்கள் நிகழ்ச்சிகளை சமர்ப்பிக்குமாறும் கூட ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் அழைப்பு விடுக்கிறது.

**ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து**

செப்டம்பர் 30 ஆம் நாளில், ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையானது, வழக்கமான வார நாள் அட்டவணைப்படி இயங்கும்; அதே சமயத்தில் சில வழித்தடங்கள் ரத்து செய்யப்படும்;:

சேவையில் இருக்கும் வழித்தடங்களை இங்கு காணலாம்:
https://www.brampton.ca/EN/residents/transit/plan-your-trip/Pages/Schedules-Maps-Covid.aspx

பின்வரும் சேவைகள் **இருக்காது**:

- 501A/ 501C ஜூம் க்வீன் (குறிப்பு: 501 ஜூம் க்வீன்  இன்னமும் இயங்கிவருகிறது)
- 561 ஜூம் க்வீன்  மேற்கு
- 18B டிக்ஸீ (18 டிக்ஸீ இன்னமும் இயங்கிவருகிறது)
- 21 ஹார்ட் லேக்
- 36 கார்டன்ப்ரூக்
- 40 சென்ட்ரல் இண்டஸ்டிரியல்
- 58 ஃபினான்சியல் ட்ரைவ்
- 65 சீனியர்ஸ் ஷாப்பர்
- 92 ப்ரமீலியா GO
- 104 சிங்க்வாகவ்ஸி எக்ஸ்ப்ரஸ்
- 185 டிக்ஸீ எக்ஸ்ப்ரஸ்

செப்டம்பர் 30 ஆம் நாளில் அனைத்து பேருந்து முனையங்களிலும் வாடிக்கையாளர் சேவை கவுன்ட்டர்கள் திறந்தே இருக்கும். தொடர்புக்கான மையமானது உதவி புரிவதற்காக காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்தே இருக்கும். மேலும் தகவல்களுக்கு தொடர்புக்கான மையத்தை  905.874.2999 இல் அழைக்கவும் அல்லது இந்த வலைத்தளத்திற்கு வருகை புரியவும்: www.bramptontransit.com

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத்  தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும்.  ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே  ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம்

பேருந்துகள் 24 மணிக்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்

பேருந்து பயணிகள் முகக்கவசம் அணிந்திருந்தபோதிலும், பேருந்து முனையங்கள், நிறுத்தங்களில் கூடியமட்டில் உடல்ரீதியான சமூக விலகலை தொடர்ந்து பராமரிக்குமாறு நகர நிர்வாகம் வலியுறுத்துகிறது. பயணிக்கும்போது பேருந்து பயணியர் தங்கள் கைவசம் தமது உபயோகத்திற்காக கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்கள் போன்றவற்றை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; இருமும்போதும், தும்மும்போதும் தங்கள் முகத்தை முழங்கையில் புதைத்தபடி இருமவும் அல்லது தும்மவும். நோய்வாய்ப்பட்டதாக தெரிந்தால், பேருந்தில் பயணிப்பதை தவிர்த்துவிட்டு, அருகாமையில் இருக்கும் கோவிட்-19 நோய் மதிப்பீட்டு மையத்தில் சோதித்துக்கொண்டு, பொது சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

வழக்கப்படியான புது செய்திகளுக்கு www.brampton.ca/COVID19 மற்றும் www.bramptontransit.comக்கு வருகை புரியவும் அல்லது புதுப்பிப்புக்களுக்கு டுவிட்டரில் @bramptontransit ஐப் பின்பற்றவும். கேள்விகள் இருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து தொடர்பு மையத்தை 905.874.2999 என்ற எண்ணில் அழைக்கவும்.905.874.2999.

**ப்ராம்ப்ட்டன் பூங்காக்கள்**

ப்ராம்ப்ட்டன் நகரின் அனைத்து நடைப்பயிற்சிப் பாதைகள், விளையாட்டு மைதானங்கள், பிணையில் வைக்கப்படாத நாய்களுக்கான பூங்காக்கள் **செப்டம்பர் 30 ஆம் தேதியன்று** திறந்திருக்கும். ஒவ்வொருவரின் உடல் ஆரோக்கியம் மற்றும் நல் வாழ்விற்கும் உடல்ரீதியான செயல்பாடு முக்கியமாகும் பூங்காக்கள் மற்றும் நடைப்பயிற்சி பாதைகள் எங்குள்ளன எனதெரிந்து கொள்ள www.brampton.ca/parks க்கு வருகை தரவும்.

**ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு**

தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுதுபோக்கு மையங்கள் முன்பதிவின் பேரில் பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளுக்காக திறந்தபடி இருக்கும். அனைத்து பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் சேவைகள் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/recreation.

வீட்டில் இருக்கும்போது, ஆன்லைன் பயிற்சி வகுப்பினைப் பின்பற்றி தொடர்ந்து செய*லூ*க்கத்துடனும் ஈடுபாடு கொண்டபடியும் இருங்கள். முழு உடற்பொருத்தம் ஆவதற்கு முயற்சி செய்யுங்கள், காகிதங்களில்

வடிவங்கள் செய்வது எப்படி என கற்றுக்கொள்ளுங்கள்; கையெழுத்து திறன்களை பழகுங்கள், இன்னும் பலதைச் செய்யுங்கள். வீட்டிலிருந்தபடி செய்யக்கூடிய பலதரப்பட்ட வேடிக்கைகளுக்கு வருகை தாருங்கள்: www.brampton.ca/recathome.

பொழுதுபோக்கு மையம் ஒன்றுக்கு செல்லும்போது தடுப்பூசி செலுத்திக்கொண்ட சான்று மற்றும் சொந்த அடையாள அட்டை தேவைப்படுகிறது. அவசியங்கள் மற்றும் விதிவிலக்குகள் பற்றிய முழு விபரங்ககளுக்கு ப்ராம்ப்ட்டன் பொழுதுபோக்கு வலைப்பக்கத்தை இங்கு காணவும்

**ப்ராம்ப்ட்டன் நூலகம்**

ப்ராம்ப்ட்டன் நூலகத்தின் அனைத்து கிளைகளும் செப்டம்பர் 30 ஆம் தேதியன்று மூடப்படுகின்றன.

எங்கள் வலைத்தளமாகிய Brampton Library website இல் எந்த வேளையிலும் எங்கள் டிஜிட்டல் நூலகத்திற்கு வருகை தரலாம். இதில் ஆன்லைன் கடன் பெறலாம்; இ-புத்தகங்கள், இ-ஆடியோபுத்தகங்கள், டிவி மற்றும் திரைப்பட ஒளிபரப்பு, ஆன்லைன் கற்றல், கலை மற்றும் கைவினை இவை அனைத்தும், உங்கள் நூலக அட்டை மூலமாக இலவசமாக கிடைக்கும்.
பள்ளிக்கு திரும்பவும் செல்கிறீர்களா அல்லது வேலை தேடுகிறீர்களா? எங்கள் புதிய கற்றல் தளமாகிய ப்ரெய்ன்ஃப்யூஸ் (Brainfuse) ஐப் பாருங்கள்; இது நூலக அட்டை வைத்திருப்போருக்கான ஆன்லைன் பயிற்சியளித்தல் மற்றும் வேலைவாய்ப்பு தேடுதலுக்கான இலவச பயிற்சி அளிக்கும் இடமாகும்.

ப்ராம்ப்ட்டன் நூலக அட்டை ஒன்றைப் பெற, இங்கு க்ளிக் செய்யவும். அவரவர் விருப்பப்படி புத்தகங்களைத் திருப்பித் தருவதற்காக அனைத்து கிளை நூலகங்களிலும் புத்தகங்களை 24 மணி நேரமும் விட்டுச்செல்வதற்காக பெட்டி வைக்கப்பட்டு, அதற்கான நேரமும் நீட்டிக்கப்பட்டுள்ளது. கேலண்டர் நிகழ்ச்சிகளின் மெய்நிகர் நிகழ்ச்சி நிரல்களில் கலந்து கொள்ள பதிவு செய்து திட்டமிடவும் மற்றும் மெய்நிகர் கதை கேட்கும் நேரத்தில் ப்ராம்ப்ட்டன் யூ-டியூப் பக்கத்தில் வீடியோக்கள் பார்த்து மகிழவும்.

நாம் தொடர்பிலேயே இருப்போமாக! எங்கள் மின்னஞ்சல் வழி புதுப்பிப்புக்களுக்கு சந்தாதாரர் ஆகுங்கள் மற்றும் Facebook, Twitter, LinkedIn YouTube மற்றும் Instagramஇல் பின்தொடருங்கள்.

உங்களுக்கு சேவை செய்வதற்காகவே ப்ராம்ப்ட்டனின் அனைத்து நூலக கிளைகளும் திறக்கப்பட்டுவிட்டன. விபரங்களுக்கு எங்கள் வலைத்தலத்திற்கு வருகை தரவும்.

**ப்ராம்ப்ட்டன் விலங்குகளுக்கான சேவைகள்**

ப்ராம்ப்ட்டன் விலங்குகள் காப்பகம் **செப்டம்பர் 30 ஆம் தேதி** அன்று மூடப்பட்டிருக்கும்

சாலைகளில் விலங்குகள் கட்டுப்பாடு என்பது திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரையும், சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் காலை 8 மணி முதல் மாலை 6:30 மணி வரையும் அமலில் இருக்கும்; இது பின் வரும் அழைப்புக்களுக்கு மட்டுமே செவிசாய்க்கப்படும்:

- நோயுற்ற/காயப்பட்ட/ஆக்ரோஷமான வீட்டு மற்றும் காட்டு விலங்குகளை பிடித்து செல்லுதல்
- ஆக்ரோஷமான விலங்கு
- சுற்றித்திரியும் நாய்
- நாய்க்கடி விசாரணை
- அடைபட்ட தெருநாயைப் பிடித்து செல்லுதல்
- இறந்து கிடக்கும் விலங்கினை அகற்றுதல்

இந்த நேரங்களுக்கு அப்பால், அவசர கால அழைப்புக்களுக்கு மட்டுமே விலங்கு கட்டுப்பாட்டு அமைப்பினர் செவிசாய்ப்பார்கள்.

**பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் நினைவூட்டல்கள்**

கோவிட்-19 லிருந்து உங்களையும் மற்றவர்களையும் பாதுகாத்துக்கொள்ள இந்த பொது சுகாதார நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்கவும்:

- தடுப்பூசி செலுத்திக்கொள்ளவும்
- கட்டிடங்களின் உள்ளேயும் திறந்த வெளிகளிலும் மாகாண வழிகாட்டுதல்களைப் பின்பற்றும் அதே சமயத்தில், வெவ்வேறு வீட்டினருக்கு இடையில் சமூக இடைவெளியைப் பேணி வரவும்.
- உங்கள் வீட்டார் அல்லாத மக்களுடன் நீங்கள் பரஸ்பர செயல் புரிய வேண்டி இருப்பின் , இந்த நான்கு முக்கியமான பழக்கங்களைக் கடைப்பிடியுங்கள்:
  - சமூக விலகலாக 2 மீட்டர் தூரம்
  - முகக் கவசம் அணிதல்
  - உங்கள் கைகளை அடிக்கடி கழுவுதல்
  - சிறிதேயான அடையாளங்கள் இருந்து உடல் நலமில்லாது இருப்பின் வீட்டிலேயே இருந்துவிடுதல்

-30-

**ப்ராம்ப்ட்டன் நகர  ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca

**பீல் பிராந்திய ஊடக தொடர்பு**
ஆஷ்லீ ஹாக்கின்ஸ்
தகவல் தொடர்புகள் சிறப்பியலாளர்-பொதுமக்கள் நலன்
பீல் பிராந்தியம்
416.818.4421 | ashleigh.hawkins@peelregion.ca